DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE III ADDITIONAL SUB COURT, MADURAI

OS.No.120/2019

DEPOSITION OF WITNESS FOR P.W.1

Name :Sankaranarayanan. Father's Name :

Village : Taluk :

Caste : Calling :

Religion: Age :

Solemnly affirmed in accordance with provisions of Act of 1873 of the day of 26.11.2020

முதல் விசாரணை :-

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கு சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். எனது தரப்பு சாட்சித்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். சரியாக இருந்தது. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் வாதி வங்கி பிரதிவாதிக்கு கொடுத்த அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.1ஆகும். பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 26.11.2012 தேதியிட்ட கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.2ஆகும். பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 26.11.2012 தேதியிட்ட அதிகார கடிதம் வா.சா.ஆ.3ஆகும். பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 26.11.2012 தேதியிட்ட கடன் தவணை கடிதம் வா.சா.ஆ.4ஆகும். பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 26.11.2012 தேதியிட்ட உறுதிமொழி கடிதம் வா.சா.ஆ.5ஆகும். வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 26.11.2012 தேதியிட்ட கொதுவை ஒப்பந்தப் பத்திரம் வா.சா.ஆ.6ஆகும். பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த 29.11.2012 தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட Memorandam of Deposit of Title Deeds அசல் வா.சா.ஆ.7ஆகும். வேலாயுதமணி வெள்ளிமலை என்பவருக்கு 23.09.1983 தேதியிட்டு எழுதிக்கொடுத்த ஈடுகடன் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.8ஆகும். வேலாயுதமணி என்பவர் தம்பிராஜன் என்பவருக்கு 21.04.1988 தேதியிட்டு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.9ஆகும். தம்பிராஜன் என்பவர் செந்தில்குமார் என்பவருக்கு 31.08.2012 தேதியிட்டு எழுதிக்கொடுத்த

கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.10ஆகும். மேற்கண்ட சொத்து சம்பந்தமான வாடிப்பட்டி சார்பு அலுவலகத்திலிருந்து 01.01.1987 வருடத்திலிருந்து 17.09.2012ம் ஆகிய 26 வருடங்களுக்கு உண்டான வில்லங்கச் சான்று வா.சா.ஆ.11ஆகும். மேற்கண்ட சொத்து சம்பந்தமான வாடிப்பட்டி சார்பு அலுவலகத்திலிருந்து 01.01.1981 வருடத்திலிருந்து 31.12.1986ம் ஆகிய 6 வருடங்களுக்கு உண்டான வில்லங்கச் சான்று வா.சா.ஆ.12ஆகும். வாதிக்கு பிரதிவாதி 20.11.2015 தேதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ.13ஆகும். வாதிக்கு பிரதிவாதி 17.11.2018 தேதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ.14ஆகும். வாதி பிரதிவாதிக்கு கடனை திரும்ப செலுத்துமாறு 04.04.2018 தேதியிட்டு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.15ஆகும். பிரதிவாதியின் வங்கி கணக்கு விவரப்பட்டியல் வா.சா.ஆ.16ஆகும். பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் தட்டெழுத்தருக்கு என்னால்
சொல்லப்பட்டு, தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு
செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு,
அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
மதுரை.